
சிவ சிவ

திருச்சிற்றம்பலம்

# அச்சுதமங்கலத்து அற்புத ஆலயங்கள்



ஸ்ரீ விசாலாக்ஷி சமேத ஸ்ரீ காசி விஸ்வநாத ஸ்வாமி ஆலய

## மஹா கும்பாபிஷேக விழா மலர்

**திருவாதிரையான் திருவருட்சபை, சென்னை.**

**நவம்பர் 18, 2012**

## பணிவுரை

செடிகொள் நோயின் அடையார் திறம்பார் செறு தீவினை

கடிய கூற்றமும் கண்டு அகலும் புகல் தான் வரும்

நெடிய மாலோடு அயன் ஏத்தநின்றார் திருவாஞ்சியத்து

அடிகள் பாதம் அடைந்தார் அடியார் அடியார்கட்கே.

--- திருஞானசம்பந்தர் தேவாரம்

தெய்வப் பொன்னி நதி வளம் கொழிக்கும் சோழ வளநாட்டில் காவிரியின் இருகரைகளிலும் உள்ள தேவாரப் பாடல் பெற்ற தலங்கள் 190 ஆகும். இவற்றைத் தவிர தேவார வைப்புத் தலங்களும், பதிகங்கள் கிடைக்காத பழைய ஆலயங்களும் ஏராளமாக அமைந்து சோழ நாட்டையே சோறு (முக்தி) தரவல்ல சிவராஜதானியாகவும் ஆக்கி இருப்பது அடியார்கள் சிந்தையை மகிழ்விப்பதாக அமைந்துள்ளது. நமது வாழ்நாளில் தரிசிக்க வேண்டிய ஏராளமான தலங்கள் இப்பகுதியில் இருக்கக் காண்கிறோம்.

இப் பழமையான தலங்கள் தேவர்களாலும்,முனிவர்களாலும் பலகாலும் வழிபடப்பட்டவை. மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்டு, நிபந்தங்கள் வழங்கப்பெற்றவை. வேண்டிய வரங்கள் யாவும் தர வல்லவை. இவற்றைப் பராமரிப்பது அந்தந்த ஊர் மக்களின் முக்கியக் கடமை ஆகும். நம்முடைய முன்னோர்கள் விட்டுச் சென்ற பணிகளை நாம் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

நன்னிலத்திலிருந்து சுமார் நான்கு கி.மீ. தொலைவிலுள்ள ஸ்ரீவாஞ்சியம் என்ற பாடல் பெற்ற தலத்தின் அருகிலுள்ள அச்சுத மங்கலம் என்ற ஊரில் மட்டுமே மூன்று சிவாலயங்கள் உள்ளன. இவற்றுள் பல ஆண்டுகளுக்குப் பிறகு, ஸ்ரீ சோமேஸ்வரர் ஆலயம் மட்டுமே திருப்பணியும்

கும்பாபிஷேகமும் (2004-ல்) கண்டுள்ளது. மற்றோர் ஆலயமான ஸ்ரீ விஸ்வநாத ஸ்வாமி ஆலயத்தைத் திருப்பணி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை உள்ளூர் அன்பர் சிவத்திரு மதனமோகன் அவர்கள் மூலம் திருவருள் உணர்த்திற்று. அன்பர்கள் பலரது ஆதரவுடன் பல்வேறு திருப்பணிகள் நிறைவேறி, இதன் குடமுழக்கு விழா, 18.11.2012 ஞாயிறன்று நடைபெறுகிறது. இத்திருப்பணியில் சிறு அங்கம் வகித்த திருவாதிரையான் திருவருட் சபை , இத்திருநாளை முன்னிட்டு, இத்தலப் பெருமைகள் அடங்கிய இச்சிறு நூலை அடியார்களுக்கு வழங்குவதைப் பெறும் பேறாகக் கருதுகிறது. திருப்பணிக்குத் துணை செய்த சபை அன்பர்களுக்கும் ஏனைச்சிவநேசச்செல்வர்களுக்கும் கிராமவாசிகளுக்கும் திருவருள் என்றென்றும் துணை செய்வதாக.

.இத்தலத்தின் மற்றோர் கோவிலான ஸ்ரீ தர்மேச்வர ஸ்வாமி கோவிலையும் திருப்பணி செய்ய வேண்டிய நிலையில் இருப்பதால் ஸ்வாமி சந்நிதியின் பூச்சு வேலைகளை நமது சபை திருவருள் துணையுடன் துவங்கியுள்ளது. இத்திருப்பணியிலும் அடியார்களைப் பங்கேற்கத் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறோம்

.கும்பாபிஷேகம் பற்றிய சுருக்கமான குறிப்புக்கள் நூல் இறுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. காலம் கருதி வெளியிடப்படும் வேண்டுகோளும் நிறைவாகக் காணலாம். இப்பணியில் எம்மையும் ஓர் பொருளாக ஆட்கொண்ட ஆடல்வல்ல நாதனின் மலர்ச்சேவடிகளை வாழ்த்தி வணங்குகிறோம்.

சிவபாதசேகரன்

திருவாதிரையான் திருவருட் சபை

சென்னை .

9840744337

# அச்சுத மங்கலத்து அற்புத ஆலயங்கள்

**தலமும் இருப்பிடமும்:** புண்ணியத் தலங்களும் தீர்த்தங்களும் நிறைந்த சோழ வளநாட்டில் தெய்வப்பொன்னி நதியின் தென்கரையில் உள்ள தேவாரப் பாடல்பெற்ற சிவத்தலங்களுள் ஒன்றானதும்,காசிக்கு நிகரான தலமாக விளங்குவதும், எம பயம் போக்க வல்லதும்,சிவபெருமானுக்கு இயமன் வாகனமாகிய தனிச்சிறப்புடையதும்,இயமனுக்குத் தனிச்சந்நிதி அமைந்துள்ளதும்,கார்த்திகை ஞாயிறுகளில் நீராடுவதால் பெரும் புண்ணியத்தை அளிக்கும் குப்தகங்கை என்னும் புண்ணிய தீர்த்தத்தை உடையதும் சமயாசார்யர்கள் நால்வராலும் பாடப் பெற்றதுமான பல பெருமைகளைக் கொண்ட ஸ்ரீ வாஞ்சியம் என்ற திருத்தலத்திற்கு 1 கி. மீ. தொலைவில் அமைந்துள்ளது அச்சுத மங்கலம் என்ற அழகிய ஊர். ,

இருப்புப் பாதை வழியில் செல்வோர் மயிலாடுதுறை - திருவாரூர் பாதையில் உள்ள நன்னிலத்தில் இறங்கி, பேருந்து மூலம் கும்பகோணம் செல்லும் பாதையில் 8 கி.மீ. பயணித்தால் அச்சுதமங்கலத்தை அடையலாம். தமிழகத்தின் தென் மாவட்டங்களில் இருந்து ரயிலில் வருபவர்கள், கும்பகோணத்தில் இறங்கி,நன்னிலம் செல்லும் பேருந்து மூலம் இத் தலத்தை அடையலாம்.

**தலத்தின் தொன்மை:** பாண்டவர்கள் வழிபட்டதாகச் சொல்லப் படுவதால் இதன் தொன்மை தெரிய வருகிறது. மன்னர்கள் காலத்தில் செய்யப்பட்ட திருப்பணிகளால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பும் இத்தலம் சீரும் சிறப்புமாக இருந்ததை அறிகிறோம். .

**தலத்தின் பெருமை: இவ்வூரிலுள்ள மூன்று சிவாலயங்களுமே மிகப் பழமையும் பெருமையும் வாய்ந்தவை. அவையாவன:**

1) **ஸ்ரீ சௌந்தர நாயகி சமேத ஸ்ரீ சோமேச்வர ஸ்வாமி ஆலயம்**
2) **ஸ்ரீ தர்மபத்தினி அம்பிகா சமேத ஸ்ரீ தர்மேச்வர ஸ்வாமி ஆலயம்**
3) **ஸ்ரீ விசாலாக்ஷி அம்பிகா சமேத ஸ்ரீ காசி விஸ்வாதஸ்வாமி ஆலயம்**

### ஸ்ரீ சௌந்தர நாயகி சமேத ஸ்ரீ சோமநாத ஸ்வாமி ஆலயம்

இத திருக்கோவிலைச் சோமீச்சரம் என்ற தேவார வைப்புத் தலம் என்று கருதுகின்றனர். திருநாவுக்கரசு நாயனாரின் க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகப் பாடல் ஒன்றில் “சோமீச்சரம்” எனப்படுவது இத்தலமே எனக் கொள்வர்.

நறையூர் சித்தீச்சரம் நள்ளாறு நாரையூர் நாகேச்சரம் நல்லூர் நல்ல
துறையூர் சோற்றுத்துறை சூலமங்கை தோணிபுரம் துருத்தி **சோமீச்சரம்**
உறையூர் கடல் ஒற்றியூர் ஊற்றத்தூர் ஓமமாம்புலியூர் ஓர் எடகத்தும்
கறையூர் கருப்பறியல் கன்றாப்பூரும் கயிலாயநாதனையேகாணலாமே.

என்பது அப்பாடல்.

**கோயில் அமைப்பு:** ஊரின் நடுவில் கிழக்கு நோக்கி அமைந்துள்ள இச்சிவாலயம்,சுதைச்சிற்பங்கள் அமைந்த அழகிய ராஜ கோபுரத்துடன் அழகுற விளங்குகின்றது. இதனை அடுத்து, பலிபீடமும்,நந்திமண்டபமும் அமைந்துள்ளன.அருகில் வசந்த மண்டபமும் இருக்கக் காண்கிறோம். இரண்டாம் கோபுரவாசலுக்கு உட்புறம் காவடி ஏந்திய நிலையில் உள்ள சோமநாத முனிவரின் சிற்பம் உள்ளது. இவர் முதுமைக்காலம் வரையில் காசியிலிருந்து கங்கையைக் கொண்டு வந்து அபிஷேகம் செய்ததாகவும், பின்னர், அவருக்கு இரங்கி, சிவபெருமானே, விநாயகர் மூலம் காசி-கங்கையை இங்கு வரவழைத்துத் தந்ததாகவும் வரலாறு கூறுகிறது. எனவே,ஆலயத்தின் வடமேற்குத்திசையில் காசி விநாயகர் ஆலயமும் தீர்த்தக் கிணறும் இருக்கின்றன. தனியாக நவக்ரகசன்னதி என்று இல்லாவிடினும்,சூரியன்,சனி பகவான் ஆகிய மூர்த்திகள் திருச்சுற்றில் இருக்கக் காணலாம்.

ஆலயம் பெரிது 292 அடி நீளமும் 148 அடி அகலமும் கொண்டது. மூலவர் ஸ்ரீ சோமநாதஸ்வாமி சதுர பீடத்தில் அருட் காட்சி வழங்குகின்றார். ஸ்ரீ சௌந்தர நாயகி அம்பிகையும் கிழக்கு நோக்கியவண்ணம் அருள் பாலிக்கிறாள். இரண்டு பிராகாரங்கள் உள்ள இக்கோவிலில் தேவகோஷ்ட மூர்த்திகளும் பிற சிற்பங்களும் அழகு வாய்ந்தவை.

விநாயகர், கஜசம்ஹாரர், கிராதமூர்த்தி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், திரிபுராந்தகர், வீணாதரர், அர்த்தநாரி,ஜுரஹரேசர், முதலிய சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை.

கருங்கற்களால் கட்டப்பட்ட இவ்வாலயம்,1182- ம் ஆண்டில் எழுப்பப் பட்டதாகக் கல்வெட்டு மூலம் ஆதாரம் காட்டுவர்.

இக்கோயிலின் தல விருக்ஷமாக வில்வமும், தீர்த்தமாகக் காசி தீர்த்தமும் அமைந்துள்ளன.

**தல புராணம்:**

இத்தலத்து இறைவனை, சந்திரன், தாரா, காசி முனிவர் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர்.

இத் திருக்கோவில், வங்காளத்தில் இருந்து வந்த கோஸ்வாமி மிச்ரா என்பவரது சகோதரர் ஸ்ரீகண்ட சம்பு என்பவரால் கி.பி. 1182- ம் ஆண்டு கட்டப்பட்டது என்று கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.இவர் மூன்றாம் குலோத்துங்க சோழனின் ராஜ குருவாக இருந்தவர். இம்மன்னன்,இதற்கு நிலங்கள் அளித்ததோடு,பூஜை,திருவிழாக்கள்ஆகியன நடைபெற ஏற்பாடு செய்துள்ளான். இக்கோயிலில் சிற்பிகளாகப்பணி புரிந்த ஆறு பேரின் பெயர்களும் கல்வெட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஸ்ரீகண்ட சம்புவின் மைந்தர் ஈஸ்வர தேவர் என்பவருக்கு சோமேச்வரன் என்ற பெயரும் இருந்தது.இவ்வூர் இவர் பெயரால் சோமநாதமங்கலம் எனப்பட்டது.இதைச் சுற்றியுள்ள ஊர்கள், சோமநாதநல்லூர், சோமநாத சதுர்வேதிமங்கலம், சிவபாதசேகர மங்கலம் என வழங்கப்பட்டன.இவ்வாலயச் சிற்பங்கள் சோழர் காலக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்வன.

**பரிவார மூர்த்தங்கள்:** ஸ்ரீசோமனாதஸ்வாமியின் பரிவாரங்களாக,கணபதி, பாலமுருகன்,லிங்கோத்பவர், கஜலக்ஷ்மி, பிரம்மா,துர்க்கை,கால பைரவர், சண்டிகேஸ்வரர்,சூரியன்,ஆகிய மூர்த்திகளோடு, அப்பர் ஸ்வாமிகள், சேக்கிழார், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய திருவுருவங்களையும் திருச்சுற்றில் காணலாம்.

**தீர்த்தம்** : கோயிலுக்கு வடமேற்கில் உள்ள காசி தீர்த்தம் கங்கைக்கு நிகரானது என்றும், பாவங்களைத் தீர்க்க வல்லது என்றும் பெரியோர்கள் கூறுகின்றனர். இதில் நீராடுவோர்,எல்லா நலன்களையும் பெறுவர்..

**தல விருக்ஷம்:** ஆலய நுழைவு வாயிலின் அருகில் வெளிப் பிராகாரத்தில் உள்ள பழமையான வில்வ மரமே இத்தல விருக்ஷமாகக் கருதப்படுகிறது.

**பிற செய்திகள்:** ஆண்டு தோறும் விடியற்காலை சூரியோதயத்தின் போது, சூரியனின் ஒளிக்கதிர்கள் சுவாமியின் மீது விழும்போது சூரியபூஜை நடத்தப்படுகிறது.

இங்குள்ள பைரவர் மிகவும் சக்தி வாய்ந்த மூர்த்தி. தீராத பகைகளையும் பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பவர். எனவே, தேய்பிறை அஷ்டமியன்று மக்கள் இவருக்கு அபிஷேக ஆராதனைகள் செய்து, நலம் யாவும் பெறுகின்றனர்.

செவ்வாய்,வெள்ளிக்கிழமைகளில் துர்கையைவழிபட்டு, திருமண பாக்கியம், புத்திர பாக்கியம் ஆகிய கோரிய வரங்களைப் பெறுகின்றனர்.

**கல்வெட்டுக்கள்:** சுமார் முப்பது கல்வெட்டுக்கள் அரசினரால் படிஎடுக்கப் பட்டுள்ளன. இவை மூன்றாம் குலோத்துங்கன் இத்திருக்கோயிலுக்கு வழங்கிய தேவ தானங்களைக் குறிப்பன.

**பூஜைகளும் விழாக்களும்:** இந்து அற நிலையத்துறைக்குச் சொந்தமான இக்கோயிலில் காலையும் மாலையும் பூஜைகள் நடைபெறுகின்றன. பிரதோஷ பூஜை மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. விநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தி பூஜை நடக்கிறது. தவிரவும், மாதம்தோறும் கிருத்திகை நாட்களில் முருகனுக்கு விசேஷ வழிபாடு நடைபெறுகிறது..

வைகாசி விசாகம், ஆடிப்பூரம்,ஆடி-தை வெள்ளிக்கிழமைகளில் அம்பாளுக்கு விசேஷ அலங்காரம்,விநாயக சதுர்த்தி, நவராத்திரி, ஸ்கந்த சஷ்டி,அன்னாபிஷேகம், கார்த்திகை தீபம், மார்கழி உஷக் கால பூஜை, ஆர்த்ரா தரிசனம்,தை பூசம்,மகர சங்கராந்தி, மகாசிவராத்திரி ஆகிய நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன.

**திருப்பணிகள்:** இக்கோயிலில் கும்பாபிஷேகம் நடந்து சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு மேல் ஆனபடியால்,.1964-ம் ஆண்டு பாலாலயம் செய்து திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அன்பர்கள் ஆதரவுடனும் சோமனாதப் பெருமானின் அருளுடனும் பல்வேறு திருப்பணிகள் நிறைவேறி கும்பாபிஷேகம் 4.2.2004 அன்று நடைபெற்றது.
மேற்படி தகவல்களை அச்சுதமங்கலம்சேக்கிழார் வழிபாட்டுமன்றத்தினர் அன்று வெளியிடப்பட்ட கும்பாபிஷேக மலரில் தெரிவித்துள்ளனர்.

**ஸ்ரீ தர்மபத்தினி சமேத ஸ்ரீ தர்மேச்வர ஸ்வாமி ஆலயம்** .

பாண்டவர்களில் மூத்தவரான தருமபுத்திரரால் வழிபடப்பெற்ற இந்த ஆலயம் பெரிதும் சிதிலமடைந்து இருக்கிறது.அர்ஜுனன் தன் வில்லால் உண்டாக்கிய குளம் அருகில் உள்ளது. உடனடியாகத் திருப்பணி செய்ய வேண்டிய இந்த ஆலயம் சீர் பெற இறை அருளை வேண்டுவோமாக.

**ஸ்ரீ விசாலாக்ஷிசமேத ஸ்ரீகாசி விஸ்வநாத ஸ்வாமி ஆலயம்**:

அச்சுத மங்கலத்தில் தற்போது கும்பாபிஷேகம் காணும் ஆலயம் இது. தனது ராஜ்ஜியத்தையும்,மனைவியையும் இழந்த அரிச்சந்திரன்,தீர்த்த யாத்திரையாகத் தென்னாட்டை நோக்கி வந்தபோது,இத்தலம்,இலுப்பை மரங்கள் சூழ்ந்த காடாக இருந்தது. காசிக்குச் சமமானதிருவாஞ்சியத்தின் அருகிலேயே இத்தலமும் இருப்பதால்,அவ்வனத்தின் நடுவில் இருந்த சிவலிங்கத் திருமேனியைக்கண்டு,பரவசம் அடைந்து,அப்பெருமானுக்குக் காசி விஸ்வநாதர் என்று பெயரிட்டு,வழிபாடுகள் செய்தான்.

காலப்போக்கில்,பராமரிப்போர் இன்றி ஆலயம் சீரழிந்தது. சிவலிங்கத் திருமேனி ஒன்றே எஞ்சி நின்றது.பிற மூர்த்திகள் எப்படி மறைந்தன என்று அறியக்கூட இல்லை.இவ்வளவு பெருமை வாய்ந்ததும், சத்தியத்தின் உறைவிடமாகத் திகழ்ந்த அரிச்சந்திரனால்வழிபடப் பெற்றதுமான காசி விஸ்வநாதர் ஆலயத்தை மீண்டும் நிர்மாணித்து வழிபாடுகள் செய்யவேண்டும் என்ற எண்ணத்தைத் திருவருள் உணர்த்தவே,அன்பர்கள் உதவியுடன் திருப்பணிகள் மேற்கொள்ளப்பெற்று ,மகா கும்பாபிஷேகமும் விமரிசையாக நடைபெறுகிறது.

**ஸ்தல விருக்ஷம்**: இலுப்பைமரம்.கோவிலுக்குஎதிரில் உள்ளது.

**தீர்த்தம்**: சூரிய தீர்த்தம் கோவிலுக்கு அருகிலுள்ளது.சூரிய பகவானால் உண்டாக்கப்பட்டது.

**மூர்த்திகள்**: ஸ்வாமி: ஸ்ரீ காசி விஸ்வநாதர்; அம்பிகை: ஸ்ரீ விசாலாக்ஷி விநாயகர்,முருகன், லக்ஷ்மி , சண்டிகேஸ்வரர் ஆகிய மூர்த்திகள் நூதனமாகப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.கோவிலைச்சுற்றிலும் சுவர்கள் எழுப்பப்பட்டும்,சந்நிதிகளில் விமானங்கள் அமைக்கப்பெற்றும் ,வர்ணங்கள் பூசப்பட்டும், ஆலயம் புதுப் பொலிவோடு விளங்குகிறது.

**சுற்றிலும் உள்ள தலங்கள்:** இங்கிருந்து நன்னிலம்செல்லும் வழியில் ஒரு கி.மீ. தொலைவில் ஸ்ரீவாஞ்சியம் சிவாலயம் உள்ளது. இங்கு கார்த்திகை ஞாயிறு தீர்த்தவாரி பிரசித்தமானது. அப்பொழுது வருகை தரும் நூற்றுக்கணக்கான அன்பர்கள் அருகாமையில் உள்ள தலங்களையும் தரிசிக்க வேண்டும்.

மகாலக்ஷ்மி , மகாவிஷ்ணுவைத் திருமணம் செய்துகொள்ள வாஞ்சித்த வாஞ்சியத்தைச் சுற்றிலும் உள்ள ஊர்கள் புராணத் தொடர்புடையவை. அவள் கூவிய இடம், கூவியபத்து எனப்பட்டுப் பின்னர் கோயில் பத்து எனப்பட்டது. இங்கு கைலாசநாத ஸ்வாமி கோயில் இருக்கிறது. அவள் மயில் உருவம் கொண்டு ஆடிய இடம் மயிலாடி எனப்படுகிறது.மீண்டும் நடனம் ஆடிய இடம் திருநடனச்சேரி எனப்பட்டுப் பின்னர்,திருவிடச்சேரி என்று ஆகியது. லக்ஷ்மியை ஏற்க வந்த நாராயண மூர்த்தி தங்கியஇடம் நாராயண மங்கலம் என்பது. இதுவே தற்போது நாரண மங்கலம் எனப்படுகிறது.விஷ்ணுவானவர் தனது அரி துயில் நீங்கி விழித்த இடம் அரிவிழிமங்கலம் எனப்படுகிறது.

இங்கிருந்து சுமார் 5 கி.மீ. தொலைவிலுள்ள காப்பணாமங்கலம்,சென்று, அங்கிருந்து ஒரு கி. மீ. தொலைவில் கங்கா தேவி பூஜித்த தலமான பெரும்பண்ணயூர் கைலாசநாத சுவாமி ஆலயத்தையும் இதன் அருகில் அருணகிரிநாதரால் பாடப்பெற்ற த்ரியம்பகபுரத்தையும் தரிசிக்கலாம்.
. குடந்தை-திருவாரூர் சாலையில் சம்பந்தரும் அப்பரும் பாடிய பெருவேளூர் , கரவீரம்,தலையாலங்காடு,குடவாசல் ஆகிய தலங்கள் அமைந்துள்ளன.
.
நன்னிலத்தில்,பாடல்பெற்ற கோவிலான ஸ்ரீ மதுவனேஸ்வரர் ஆலயமும், இதற்கு அண்மையில்,திருக்கொண்டீச்வரம்,திருப்பனையூர் ஆகிய தலங்களும் அமைந்துள்ளன.

**சமயப்பணி:** சமயப் பணி செய்யும் ஆர்வலர்களும் தல யாத்திரை செய்யும் அன்பர்களும் அச்சுதமங்கலத்திலுள்ளமூன்றுசிவாலயங்களின் வளர்ச்சியில் பங்காற்றினால்,இவ்வாலயங்கள் மேலும் வளர்ச்சி அடைந்து சிறப்பாகப் பராமரிக்கப்பட ஏதுவாகும்.
தல யாத்திரை செய்யும் அடியார் பெருமக்கள், தங்கள் வருகையைப் பற்றி முன்கூட்டியே தெரிவிக்க விரும்பினால் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : **9524348725**

**திருவாதிரையான் திருவருட் சபை ஆற்றி வரும் சமயப் பணிகள்:**

- சிவாலயத் திருப்பணி மற்றும் கும்பாபிஷேக உதவி
- கிராமக் கோயில்களில் பணிசெய்யும் சிவாசார்யர்களுக்கு உதவி
- பாடல் பெற்ற ஆலயங்களில் பதிகக் கல்வெட்டமைத்தல்
- நந்தவனம்,திருக்குளம் புனரமைப்பு.
- இணைய தளம் மூலம் சமயத் தொண்டு.
- மேலும் விவரங்களுக்கு: சிவபாதசேகரன், தொ.பே:எண் **9840744337**

# மகாகும்பாபிஷேகம்

உலக நன்மைக்காகச் செய்யப்படுவது ஆலய பூஜை. இதன் புனிதத்துவத்தைக் காக்கவும் ,மேம்படுத்தவும் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை செய்ய வேண்டியது குடமுழுக்கு ஆகும். இதன் அங்கமாகச் செய்யப்படும் கிரியைகளைப் பற்றிய சிறுகுறிப்பு இங்கு தரப்படுகிறது.

யாகசாலை, 36 தத்துவங்களைக் குறிப்பது. அதில்,அர்தச்சந்திர வடிவம், நாற்கோணம்,முக்கோணம்.,முதலிய நவ குண்டங்களை அமைத்து, ஆல் அரசு முதலிய சமித்துக்களால் அக்னிவளர்த்து,மந்திரம்,கிரியை,பாவனை ஆகியவற்றால் யாகம் செய்வர். இதனால், கும்பத்தில் ஆவாகனம் செய்யப்பெற்ற மூர்த்தியின் அருட் சக்தி மேலும் தூண்டப்பெற்று ,நிறைவாக, ஆலயத்திலுள்ள பிம்பத்தில் தருப்பைக் கயிற்றால் சேர்க்கப்பெற்று, கும்பத்துப் புனித நீரால்,விமான கலசங்களிலும், கோபுரங்களிலும் அபிஷேகம் செய்யப் படுகிறது.

பிரதிஷ்டைக்குரிய கிரியைகளுள் முதலில், தனபூஜை, அனுக்ஞை ஆகியன செய்யும்போது, சிவார்ப்பணம் செய்யப்பட பொருள்,11பாகமாகப் பிரிக்கப்பட்டு, யாகத்திற்கு 3பாகமும், ஆச்சார்ய ,ருத்விக் தக்ஷிணை, போஜனம்,வேத பாராயணம் ஆகியவற்றிற்கு தலா 2பாகமும், மகாபிஷேகம் மற்றும் மண்டலாபிஷேகத்திற்குத் தலா ஒரு பாகமும் பிரித்துச் செலவழிக்க வேண்டும். யாகத்தை நடத்தித்தர ஸ்வாமி,அம்பாள் மற்றும் சபையோரிடம் அனுமதி பெறப்படுகிறது.பிறகு இடர்கள் வராமலிருக்க விக்னேஸ்வர பூஜையும், வாஸ்து புருஷனால் தீமை வராமலிருக்க வாஸ்து சாந்தியும், பூமியை சுத்தி படுத்த ம்ருத்சங்கிரஹணமும் கிரியைகளின் சுபாசுபங்களை அறிய அங்குரார்ப்பணமும் ஆசார்யனைக் காக்க ரக்ஷா பந்தனமும், பஞ்ச சுத்திகளைச் செய்து, ஆசார்யன் தன்னை சிவ பூஜைக்குத் தகுதியுள்ளவனாக ஆக்கிக் கொள்ள வேண்டும். கும்பஸ்தாபனம் செய்து,மூலஸ்தானத்திலிருந்து சுவாமியை குடத்தில் கலாகர்ஷனம் செய்து, குறிப்பிட்ட காலம் வரை இருக்கச்செய்ய வேண்டும். பீடத்தையும் பிம்பத்தையும் சேர்ப்பது அஷ்ட பந்தன மருந்து. சுக்கான், குங்கிலியம் , கொம்பரக்கு, லிங்கம், வெள்ளை மெழுகு,காவி, செம்பஞ்சு, வெண்ணை ஆகிய பொருள்களைச் சேர்த்துத் தயாரிக்கப்படுவது இது. பின்னர் ஸ்பர்சாகுதி செய்து, தர்பைக் கயிறு மூலம் சுவாமியை ஆலயத்திலுள்ள பிம்பத்தில் சேர்த்து, கடத்திலுள்ள புனித நீரால் கலசங்களுக்கும் பிம்பங்களுக்கும் அபிஷேகம் செய்ய வேண்டும். பின்னர் மகாபிஷேகம் நடை பெறுகிறது.

***** சிவாலயங்களில் குறைந்த பக்ஷமாக, சுவாமி-அம்பாளுக்குத் தனித்தனியே ஐந்து குண்டங்களாவது அமைத்து, நான்குகால யாகசாலை பூஜைகளை,ஆகம விதிப்படி, மிகுந்த ஈடுபாட்டுடனும்,பக்தியுடனும் செய்வது அவசியம். பூஜா காலங்களில், வேத- திருமுறைப் பாராயணங்கள், ஜபங்கள் ஆகியன செய்வதால் மூர்த்திகரம் மேலும் அதிகமாகவும், கோயில் மேலும் அபிவிருத்தி அடையவும் வகை செய்யும்.**

# முக்கிய வேண்டுகோள்

பன்னிரண்டாண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடைபெறுவது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நித்திய பூஜைகளும் விழாக்களும் முறைப்படி செய்வதாகும்.. இதற்காக,ஒரு வைப்பு நிதி அமைக்கப் பெறுதல் அவசியம்.

ஆலய சிப்பந்திகள் கிராமக் கோயில்களில் மிகக் குறைந்த ஊதியமே பெறுகிறார்கள். ஊராரும், அரசாங்கமும் இதற்கு ஆவன செய்ய வேண்டும்.

நில வருவாய் குறைந்துவிட்ட இக்காலத்தில், வெளி ஊரிலுள்ள அன்பர்களின் ஆதரவால் மட்டுமே திருப்பணிகளைச் செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மாத வருமானத்தில் ஒரு சிறு பகுதியையாவது சிவாலயத் திருப்பணிக்கு அளிக்க முன்வர வேண்டும்.

இல்லங்களில் சுப காரியங்கள் நடைபெறும் போது அதற்காகும் செலவில் ஒரு சிறிய பகுதியை சிவாலய நித்திய பூஜைக்காக அளிக்க முன்வரவேண்டும்.

நகரங்களில் உள்ள அன்பர்கள் அருகிலுள்ள கிராமக் கோயில்களுக்குச் சென்று எண்ணெய்,புஷ்பம் போன்றவற்றை அளிப்பதோடு, அர்ச்சகருக்கு இயன்ற அளவு சம்பாவனை வழங்க வேண்டும்.

இவ்வழிபாடுகளில் சிறுவர்களை ஈடுபடுத்தி நல்வழி காட்ட வேண்டும்.

நித்திய மற்றும் வார வழிபாட்டுக் குழுக்கள் ஊர் தோறும் அமைக்கப் படவேண்டும் .நின்று போன திருவிழாக்களை மீண்டும் துவக்க வேண்டும்.

# www.shaivam.org

***இணைய தளத்தில் பெறும் தகவல்கள் :***

- ***சிவாலயங்கள் பற்றிய*** **ஏராளமான தகவல்கள்**
- ***பன்னிரு திருமுறைகள் : மூலம்***
- ***சைவ சித்தாந்த சாத்திரங்கள்: மூலம்***
- ***தல புராணங்கள் மற்றும் இலக்கியங்கள் : மூலம்***
- ***வட மொழியிலுள்ள சிவ*** **ஸ்தோத்திரங்கள்**
- ***சிவ பக்தியை வளர்க்கும் 24 மணி நேர ரேடியோ***
- ***வீடியோ நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள்***
- ***திருமுறை பயிற்சி வகுப்புகள், சொற்பொழிவுகள்,இசை நிகழ்ச்சிகள்***
- ***மகான்களின் வரலாறுகள்***
- ***ஆலய விழாக்கள்,திருப்பணிகள்,குடமுழுக்கு***
- **வீர சைவம்,காஷ்மீர சைவம் பற்றிய குறிப்புகள்**
- **இந்து சமய அறிமுகக் கட்டுரைகள்**
- **5000-க்கு மேற்பட்ட பக்கங்கள் /படங்கள்**
- **5000-க்கு மேற்பட்ட தினசரி (இணைய தள)ப் பயனாளிகள்**
- **இணைய தள இலவசப் பதிவிறக்கம்**
- **1996 முதல் இயங்கிவரும் இணைய தளம்**